193

உ

முருகன் துணை

காமாட்சிகலியாணம்

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி நாகலிங்க முனிவர்

அவர்கள் பதிப்பு.

ராவ்சாஹேப்

C. R முருகேசமுதலியார்

அவர்கள் தரும வெளியீடு.

1929.

Q25:4V
N29
180260

சென்னை ராஜதானிக் கல்லூரித் தமிழாசிரியர்

காவேரிபாக்கம்

திருவாளர் நமச்சிவாய முதலியாரவர்கள்

முன்னுரை

காஞ்சிப் புராணக் கலித்துறை என்பது, காஞ்சிப் புராணத்தைக் கலித்துறைப் பாவினுல் தெரிவிப்பது என்று பொருள் படும். ஆயினும், இந்நூல் காஞ்சிப் புராணக் கதைகளுள் தீழுவக்குழைந்த படலத்தை மிக விரிவாகவும், பன்னிரு நாமப்படலம், விம்மிதப் படலம், நகரேற்றுப்படலம் முதலியவற்றைச் சுருங்க விளக்கமாகவும் கூறுகின்றது. இந் நூலாசிரியரது பெயர் முதலியவை விளங்கவில்லை. 'சுப்பிரமணியர் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்' செய்தருளிய காஞ்சி ஆளவந்த வள்ளலார் ஆதீனத்துச் சிதம்பர முனிவர் இந்நூலைச் செய்தனர் என்றுசிலர் கூறுகின்றனர். செய்யுள் மிக எளிமையானது; சிற்சில செய்யுட்களுக்குப் பொருள் நன்கு விளங்கவில்லை.

இந்நூலின் ஏட்டுப் பிரதி இரண்டே கிடைத்தமையின் நன்கு ஆராய்ச்சி செய்து பதிப்பித்தற்கு இயலவில்லை; இஃது இன்னும் சிதைந்து போகாமல் உலவவேண்டியே பதிப்பிக்கப் பெற்றது.

இதனைப் பெரிதும் முயன்று அரிதின் அச்சியற்ற முன் வந்தவர் காஞ்சி நாகலிங்க முனிவர். இவர், நெடுங்காலமாகத் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்காகவும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் இத் தமிழ் நாட்டில் பரவுவதற்காகவுஞ் செய்துள்ள முயற்சிகள் மிகப் பல என்பதைத் தமிழ்மக்கள் யாவரும் நன்கு அறிவர். திருவாவடுதுறை மாதவச் சிவஞான யோகிகளும், அவரது மாணவர்

திருத்தணிகைக் கச்சியப்ப முனிவரும் செய்தருளிய காஞ்சிப் புராணத்தை அழகாகப் பிழையறப் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்தனர். இன்னும் கச்சிக்கச்சாலை தேசிகர் பாடியருளிய பழைய 'காஞ்சிப்புராணம்' என்னும் அரிய நூலைப் பதிப்பித்து வருகின்றனர். இந்நூலைப் பதிப்பித்தற்குச் சென்னை இராஜா சர். சவலை. இராமசாமி முதலியார் Kt. C. I. E. அவர்கள் அருமைப் புதல்வரும், பெங்களூர் தருமரத்திநாகரம் ஆ. நாராயணசாமி முதலியார் அவர்கள் பௌத்திரர் ராவ்சாஹேப் ஆ. மெ. தங்கவேலு முதலியார் அவர்களும் வேண்டிய பொருளுதவி செய்ததைக் கேள்வியுற்றுப் பெரிதும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

காஞ்சி நாகலிங்க முனிவர் காஞ்சிப்புரத்திலே கி. பி. 1864 ஆம் வருஷத்தில் சைவ செங்குந்த குலத்தவரானவித்துவான் பிரதாபம் சரவணப்பெருமாள் முதலியாருக்குக் கற்பிற்சிறந்த மனோன்மணி அம்மை இடமாகப் பிறந்தனர். சிறுவயதில் வீரசைவ கச்சபாலய ஐயரிடத்துத் தமிழ்க்கல்வி பயின்றனர். பிறகு சென்னையை அடைந்து அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் (சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள்) இடத்துத் தமிழ்க் கல்வியும் சாத்திரப்பயிற்சியும் நிரம்பப் பெற்றனர். இவர், தம் மனைவியார் காமாட்சியம்மையார் காலமானபிறகு காஞ்சி ஞானப் பிரகாசர் மடத்தில் சந்நியாசம் பெற்றனர். இவருக்கு குமாரர் மூவரும் குமாரத்தி ஒருவரும் உளர். இவர், தணிகை முருகனிடத்து நீங்காத மெய்யன்பு உடையவர். இவர், இத்தகைய நூல்கள் இன்னும் பலவற்றை வெளியிட்டுதவுமாறு தணிகைப் பெருமான் நல்லருள் பாலிப்பானாக.

'கடலகம்'
மயிலை, சென்னை.

கா. நமச்சிவாயன்.

உ

பதிப்புரை

எல்லாமுஞ் செய்தற் கிடமாகு மென்னெஞ்சே
கல்லார வெற்பன் கழல்.

காஞ்சிப்புரம் என்பது தொண்டை நாட்டில் முதன்மைபெற்ற தேவாரத் தலங்களுள் ஒன்று. இத்தலத்துக்குப் பன்னிரண்டு காரணப் பெயர்களுண்டு.

இத்தல மகிமையைத் திருவாவடுதுறைச் சிவஞானசுவாமிகள், திருத்தணிகைக் கச்சியப்ப முனிவரர், திருக்கச்சிக் கச்சாலை தேசிகர் ஆகிய இவர்கள் செய்தருளிய காஞ்சிப்புராணம் என்னும் பாரகாவியங்களினால் நன்குணரலாம். காலத்தினால் முற்பட்டது திருக்கச்சிக் கச்சாலை தேசிகர் அருளிய புராணமேயாகும்.

இஃதன்றிக் காமகோட்ட புராணம் என்று ஒரு புராணமும் உண்டு. அஃது இன்றளவும் அச்சு வாகனமேறி வெளிவரவில்லை. இதனுள் தேவி மாகாத்மியம் செவ்வனே காணப்படுகின்றது. இது பொழுது அச்சிற் பதிப்பித்து வரும் பழைய காஞ்சிப் புராணம் முடிந்தவுடன் காமகோட்ட புராணமும் அச்சிற் பதிப்பிக்கப்படும்.

தென்மொழி வடமொழிகளிலுள்ள மகாபுராணங்களுள்ளும், உபபுராணங்களுள்ளும், விசேட தலபுராணங்களுள்ளும் இத்தல மேன்மையைச் சொல்லாதவை பெரும்பாலும் இல.

இக் கலித்துறைப் புராணம் காஞ்சிப்புரமான்மியத்தைச் சுருக்கமாக விளக்கிக் கூறுகின்றது. இப்புராணம் காஞ்சிப் புராண சாரம் என்றும், காமாட்சி கலியாணம் என்றும் வழங்கும். இதனைச் செய்த ஆசிரியர் பெயர் நன்கு விளங்கவில்லை. நல்ல பிரதிகளும் கிடைக்கவில்லை. கிடைத்த பிரதிகளுள் பிரதி செய்தவர்கள்

இஷ்டப்படி பாடங்களைப்பலவாறு மாற்றிவிட்டனர் என்று நினைக்க இடந்தருகின்றது. கடைசியாகக் கிடைத்த புதுவைப் பிரதி ஒன்றில் 156, 158, 173, 174. 180, 182, 183 இவ்வெண்ணுள்ள செய்யுட்கள் ஐந்தடியாகக் காணப்படுகின்றன. நூல் இன்னும் சிதைந்து போகாமல் உலவ வேண்டியே ஒருவாறு செப்பஞ்செய்து பதிப்பிக்கப்பட்டது.

இந்நூலைப் பதிப்பித்தலில் எனக்குப் பொருட்கவலை யுண்டாகாவண்ணம் செய்வித்த திருப்பத்தூர் நகரபரிபாலன சபைத் தலைவர் ஸ்ரீமான் கா. அ. சண்முகமுதலியாரவர்கள் பெருந்தகைமை மிகப் பாராட்டத்தக்கது. இவரால் இயற்றப்பெற்றுள்ள 'நளாயனி வெண்பா' என்னும் நூலால் இவரது தமிழ்ப் புலமை நன்கு புலனாகும். ஸ்ரீராம நிலய ஸ்தாபக கற்பணி முதலியவற்றிற்போலவே சொற்பணியிலும் இவர்கள் அன்பு வைத்திருத்தல் இதனால் நன்கு புலப்படுகின்றது.

இப் பெருந்தகையாளர் ஞாபகம் என்றும் நிலவுலகில் நின்று வழங்குமாறு இப்பதிப்பை அவர்களுக்கு உரிமையாக்குகின்றேன்.

இக் கலித்துறைப் புராணம் அச்சுவாகனமேற எட்டினின்றும் மாறுபடாமல் கடிதத்திலெழுதி உதவிய சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர் மோ. கந்தசாமி முதலியார் B. A., M. R. A. S. அவர்கள் பேருதவி என்றும் பாராட்டத் தக்கது. எமது கல்விப்பயிற்சிக்கும் ஞானதீக்ஷைக்கும் ஆசிரியராக அமைந்தவர்களே இவர்கட்கும் ஆசிரியர்களாதலின், யாங்களிருவரும் எவ்வகையிலும் ஒருசாலை மாணவராவது கருதி மிகவும் மகிழ்கின்றேன்.

ஏதும் அறியாத என்னை இத்துறைகளில் நடத்திக்கொண்டு வரும் தணிகைநாதன் திருவருளைப் போற்றுகின்றேன்.

'காமாட்சி விலாசம்'
கீழ்ப்பாக்கம், சென்னை.

காஞ்சி - நாகலிங்கன்.

உ

முருகன் துணை

காஞ்சிப்புராணக்கலித்துறை

காப்பு

நிலைவாச லொன்பதாய் நீள்கோ புரத்தின்
தலைவாசல் வாரணத்தின் றாளே—மலைமாது
வாஞ்சித் தானுரை மாவடிக்கீழ்ப் பூசித்த
காஞ்சிப் புராணத்தின் காப்பு.

புராண சாரம்

சீர்கொண்ட வெள்ளி மலைமீ திருந்தறஞ் செய்தன்பினால்
கூர்கொண்ட வூசி முனைமே லருந்தவங் கூர்ந்துமையாள்
வார்கொண்ட பூண்முலை யாள்பூ சனைசெய்த மாவொன்றுதான்
வேர்கொண்ட காஞ்சிப் புராணமெல் லோர்க்கும் விளம்புவனே. (௧)

ஓங்குல கத்துயி ரெல்லா நரகி லுறுமிடர்கண்
டாங்குமை மாது தவம்பூசை செய்யி லவைதுயரம்
நீங்குமென் றீச னுமைமாது தன்னை நிறைதவமும்
தீங்கறு பூசை செயலின் வகையுந் தெரித்தனரே. (௨)

பெருத்தெழில் கொண்ட கயிலாய மீதிற் பிறைமுடிசேர்
உருத்திர னார்தந் திருவாய் மலர வுகந்துமையாள்
கருத்தின் மகிழ்ந்து சிவாகமங் கேட்டுக் கசிந்தினிநாம்
திருத்தகு பூசனை செய்வமென் றன்பு சிறந்தனளே. (௩)

கங்கா தரற்கு மலர்கொய்து சாத்துங் கருத்ததனுல்
கொங்கா ரளகத் துமைமாது பாங்கியர் கூட்டமுடன்
மங்காத வெள்ளி மலைச்சாரல் தன்னில் வளம்பெறவே
சிங்கார மாகிய பூங்கா வனமொன்று செய்தனளே. (ச)

பாங்காய் மலர்கொய்து சாத்திடும் போதினிற் பாதபமே
ஓங்கா வளர்ந்துமுன் பூத்தது கேட்டங் குமையவளே
நாங்காண லாமென் றிடபத்தி லேறி நடத்திச்சென்றே
பூங்கா வனத்தி லுமையோடு மீசரும் புக்கனரே. (ரு)

காவினில் மேவி யிருந்திரு வோருங் களிப்புறுங்கால்
மாவினின் மவ்வற் கொடிபடர்ந் தேறி மணந்தவர்போல்
மேவுதல் கண்டரன் கண்காட்ட முன்னிற்க வெட்கமுற்றே
தேவிபின் னுல்வந்து கண்களை மூடினள் செங்கைகொண்டே. (சு)

இங்குல கங்களை யெல்லா மொளிசெய் தியங்குகின்ற
செங்கதி ரோனுஞ் செழுமா மதியுந் திருமுகத்துச்
சங்கர னுக்கிரு கண்ணு யிருந்து தயங்குகையால்
மங்கை குடங்கை தனிலே யடங்கி மறைந்தனரே. (எ)

மூடிய செங்கை யுமையாள் திறந்திடு முன்னனந்தம்
கோடி யுகங்கள் கழியப் பிரளயங் கோத்ததுபோல்
நாடு முழுது மிருள்மூடிக் கூப்பிட நாயகனும்
நீடு நுதற்கண் மதிபோல் விழித்திருள் நீக்கினரே. (அ)

மாசிருள் நீங்க வதுகண்டு மாதுகை வாங்கிடவே
ஈச னுதற்கண் ணிமைத்துமை யேசென்ற வித்தனைநாள்
பூசை தவநல் லறமுத லாகிய புண்ணியம்போய்த்
தேச முழுதுந் திரண்டு வளர்ந்தன தீவினையே. (கூ)

அவ்வினை நீங்கிப் பழமைபோற் காசினி யத்தனையும்
செய்வினை நீங்கித் திருவடிப் பேறு சிறக்கவினி
உய்வினை யேதென் றுமைமாது கேட்க வுகந்தரனுர்
மெய்வினை யானவை யெல்லா மெடுத்து விளம்பினரே. (க0)

இச்சையி லேசிவ பூசைசெய் யார்களஃ தில்லையென்ருல்
அச்சமில் லாத தவம்புரி யார்களஃ தல்லவென்ருல்
பிச்சை யிடுதல் முதலான நல்லறம் பேணியிடார்
நிச்ச முலகினுக் கெப்படிப் பாவங்கள் நீங்குவதே. (கக)

என்று பரமன் பதினு லுலகத் தியல்பினையும்
அன்றருள் செய்ய வுமையுல கீன்றவ ளாகையினல்
நின்ற வறந்தவம் பூசனை யான்செயில் நீடுலகில்
துன்றிய பாவ மறுமோவென் றேகை தொழுதனளே. (கஉ)

மருந்தினைத் தாய்கொள்ள நோய்தீரும் பிள்ளைக்கு மற்றதுபோல்
திருந்துநற் புண்ணியம் நீசெய்வை யாகிற் செறிந்துலகில் [யாள்
பொருந்துமுற் பாவங்க ளெல்லார்க்கும் போமென்ற போதுமை
வரந்தனைப் பெற்றன மென்றீசர் பாதம் வணங்கினளே. (கங)

சிறந்த வுலகம் பதினலு முண்டு தெவிட்டநிதம்
அறஞ்செய் திடுகைக் கிருநாழி நெற்கொண் டனைவருக்கும்
நிறைந்திடு மென்று படிவைத் தருளி நிறைதவஞ்செய்
துறைந்திடு லோகம் பதினலு மூரு முரைத்தனரே. (கச)

மண்டலத் திற்செய்த புண்ணியங் கொண்டிந்த வான்மிசைக்கே
உண்டிருக் கின்ற தொழிந்தில்லை மேதினிக் கொத்ததுண்டோ
விண்டலத் துக்குயர் முத்தியு முத்தி விளக்கும்வித்தாம்
கொண்ட சிறப்பு முடியா தனைவர்க்குங் கூறிடவே. (கரு)

அதனல் மகிழ்வுற் றுறைகின்ற தானமொ ராயிரத்தெட்
டதிலே விசைப்புறுந் தானங்க ளூற்றெட் டதிற்சிறப்பாம்
பதிகூறி லெட்டெட் டதின்மிக்க தேழு பதியதற்குட்
கதிசேருந் தான மிரண்டது தன்னிற் கனத்ததொன்றே. (கசு)

சொல்வி னிவைகளைப் பார்வதி யேநான் றெருகுத்துரைத்தேன்
மல்ல லயோத்தியு மாயா வவந்திநன் மாமதுரை
நல்ல துவாரா புரிகாசி காஞ்சி நகரேழினும்
எல்லை யிலாமுத்தி யெய்து மிவற்று ளிவைசிறப்பே. (கள)

உலகினற் காசியுங் காஞ்சியு மென்றிரண் டுத்தமமாம்
தலமதிற் கங்கை யுடன்கூடிக் காசி தழைத்திருக்கும்
நிலவிய கம்பை யுடன்கூடிக் காஞ்சி நிலைத்திருக்கும்
பலமிகுங் காசியிற் காஞ்சியென் றீசர் பகர்ந்தனரே. (கஅ)

காசியின் றெற்கெல்லை காதமுன் னூற்றிற் கடற்குடபால்
வீசுமைங் காவத வெல்லையிற் றன்னிழல் விட்டகலோம்
மாசறு காஞ்சி மரநிற்கு மந்த மரப்பெயரால்
ஆசறு காஞ்சி யெனப்பேர தான தனுதியிலே. (கசு)

தாவாத புண்ணிய கம்பா நதிக்கரை தன்னிலொரு
மாவா னதுநின்று பொற்பூ மலருமம் மாவடிக்கீழ்
மூவா வுருக்கொண் டியாமிருப் போமது முத்திதலம்
பாவா யதிலெமைப் பூசியென் றீசர் பகர்ந்தனரே. (உ0)

தாங்கு மிடபத் தனிவா கனநல்கிச் சங்கரனுர்
ஓங்கிய வானத் துறைதரு பேரை யுடனனுப்ப
ஆங்குமை மாது பிரியா விசைவுகொண் டன்புடனே
பூங்கழ றன்னைப் பணிந்தே விடைகொண்டு போந்தனளே. (உக)

தென்றிசை மீது தவமேவு காஞ்சித் திருநகர்க்கே
என்று மிருந்தறஞ் செய்வோமென் றெண்ணி யெழிலுமையாள்
மன்றலந் துன்று கயிலாய நின்று வருகின்றபோ
தன்றரு கேகை கொடுத்துவந் தாள்கற் பருந்ததியே. (உஉ)

அருவா யிருக்கும் பராசத்தி தானங் கடியவர்க்காய்
உருவாகி வந்து திருமேனி கொண்ட வுமையவள்முன்
பெருவாழ்வு கொண்டு மனங்களி கூர்ந்துபொற் பெட்டகத்தில்
திருவா பரணஞ் சுமந்துவந் தாணற் றிருமங்கையே. (உங)

ஆராயுங் கங்கையுங் கன்னி நதிமுத லானதிருப்
பேரான தீர்த்தங்க ளெல்லா மழகிய பெண்ணுருவாய்
ஏராய் நெருங்கி முறைமுறை யாக விருமருங்கும்
சீரார் கவரி பணிமாற வந்தனர் சேயிழைக்கே. (உச)

கொய்வாரும் பூமலர் கொண்டேத்து வாருங் குவித்தகையோ
டுய்வாரு மாகி யடியார்கள் போற்றி யுடன்வரவே
மைவாரு நீல வயிடூ ரியநன் மணிக்கடகக்
கைவாரங் கொண்டு படித்துவந் தாணற் கலைமங்கையே. (உரு)

நடப்புறு மேனகை ரம்பை முதலிய நாடகமார்
படைத்தொகை யாறுபத் தாறெனுங் கோடி பரிசனர்கள்
விடைப்பணி கேட்டு வழிநூக்கப் பாங்கியர் மேன்மையுடன்
அடப்பை யெடுத்துவந் தாள்சசி யாளென்னு மாரணங்கே. (உசா)

தெரிசித் திடவுநற் றெண்டனிட் டேயுமை சேவடியைப்
பரிசித் திடவுந் தவங்கள்பெற் றோமென்று பத்தியுடன்
வருசத்த மாதரும் வானவர் மாதரு மற்றெவரும்
ஒருசத்த மாகமுன் போற்றிவந் தாரங் கொழிவறவே. (உன)

யாளியுஞ் சிங்கமும் போலே மிகுமிடல் யாக்கையினர்
நீளும் பரிசை யிடிபோ லிடித்திட்டு நீண்டசெங்கை
வாளுஞ் சுழற்றி விதிர்த்தார்ப் பரித்து மதத்துவரும்
காளியுந் துர்க்கையு முன்காவல் போந்தனர் கன்னிகைக்கே. (௨௮)

பட்டால வட்டங்கள் பாங்கியர் வீசப் பதறியொரு
மட்டான தற்றுத் தருக்கிச் செருக்கி மதத்துவரும்
முட்டா வெழிற்காயக் கோப்புளி தன்னுடன் முன்பரவும்
பிட்டா புரத்தி தலைக்காவல் போந்தனள் பெண்படைக்கே. (௨௯)

புரளமுன் கொத்து நிரையாகத் தைத்துப் புதுக்கியதோர்
தரளவெண் கொற்றக் குடைச்சே டியரிடந் தங்கடங்கள்
திரளையுங் கொண்டு குராலம்மை தன்னுடன் சேவகமாய்ப்
பிரளயம் வந்தவள் பிற்காவல் போந்தனள் பெண்படைக்கே. (௩0)

நெருங்குநற் கோல மணிக்கச்சு வீக்கி நிலைபெறவே
பொரும்படைக் கான கடகமும் வாளும் புனைந்துகொண்டே
மருங்கினிற் போந்தவர் கம்பகம் பாடி மறக்கருக்கி
பெருங்கிணற் றம்மை கலசாணி யென்னும் பிடாரிகளே. (௩௧)

இந்திரர் சித்த ரியக்கர் வித்யாதர ரெண்வசுக்கள்
சந்திரர் சூரியர் தும்புரு நாரதர் தாபதர்கள்
முந்திய கின்னரர் கிம்புரு டாதிகள் முற்றுமெல்லாம்
வந்தனர் சூழ வுமையாளைச் சேவிக்கும் வாழ்வுபெற்றே. (௩௨)

திட்ப வசுர ரரக்க ரியாவருஞ் சேவிக்கவே
அட்கிடு கின்ற பெரும்பூதஞ் சூழ்ந்தங் கவைவரவே
உட்பரி வாரங்கள் பிற்பரி வாரங்க ளுள்ளவெல்லாம்
எட்கிடை யோரிட மில்லாமல் வந்தன ரெண்டிக்குமே. (௩௩)

மலைக்காவல் பூண்ட வுமைமாது தெற்கு வருகின்றநாள்
கொலைக்காவல் பூண்ட பெரும்பரி வாரக் குழாத்துக்கெல்லாம்
நிலைக்காவ லாக விரண்டு புறத்தினு நிற்கமற்றைத்
தலைக்காவல் போந்தனர் சக்கர மாயனுஞ் சாத்தனுமே. (௩௪)

பண்ணிய பாவங்க ளெல்லா மொழிந்திந்தப் பார்முழுதும்
புண்ணியம் விஞ்சுதல் காரண மாகப் புறப்பட்டுநீள்
விண்ணி லுயர்ந்த கயிலாயந் தன்னினு மெள்ளமெள்ள
மண்ணி விழிந்து மகத்தினி லேயுமை வந்தனளே. (௩௫)

பாங்குடன் வந்த பரிவாரந் தன்னைமுன் பார்த்துமையாள்
யாங்கு நெருங்கியே வாருங்கள் யாவரு மென்றமையால்
தாங்க ளழிந்துரு மானுட ராகித் தராதலமேல்
ஆங்குவந் தார்க ளுமையாளைச் சூழ்ந்தங் கனைவருமே. (கூசு)

செருக்கான தின்றி யதற்குமுன் னேயந்தத் தேயமெல்லாம்
கருப்பாகி மெத்தத் தளர்ந்தே யிருப்பது கண்டிரங்கிப்
பொருப்பா ரணங்கு கருப்பான காலம் புலருமட்டும்
இருப்பா யிருந்திங் கறஞ்செய்ய வேண்டுமென் றெண்ணினளே. ()

மன்ன வருக்குண் முடிமன்ன னுமக தன்னிருபன்
துன்னு மகதப் பெருமண்ட லத்தினில் தூயகங்கை
தன்னிற் கரையினிற் புண்ணிய காசித் தலத்தில்வந்தே
கன்னி யிருந்து திருவறச் சாலைமுன் கண்டனளே. (கூஅ)

கருதுநற் காசியின் மட்டற வேநிலங் காணிகொண்டங்
கொருநக ராக்கி யதிலே தனக்கு முடனணைந்தே
மருவு மவர்க்கு மிருப்பாகி யேபுமை வாழ்கையினுல்
பெரிய சுமங்கல மென்றே யவிடமும் பேர்பெற்றதே. (கூகூ)

அரன்படி வைத்த விருநாழி நெல்லு மளவின்றியே
நிரம்பலில் வைக்கைக் கிடமின்றிக் காசி நிறைகுடியாய்த்
திருந்துதல் கொண்டு புறம்பினி லூர்கொண்டு சேர்கட்டியே
தரம்பெற வைத்திடு மூர்புறம் பூரெனுந் தாரணியே. (சo)

சோலையும் வாவியும் நன்னீர்க் குளங்களுந் தோட்டங்களும்
பாலெனுங் கூவலுந் தண்ணீர் பதித்திடும் பந்தர்களும்
சாலி வயலுங் கழுநீரி னோடையுந் தாம்முதலாய்ச்
சீல மிகுந்தன வெல்லா மமைத்தனள் சீர்பெறவே. (சக)

ஆதார மாகிய வீரே ழுலகி லமருகின்ற
பூதாதி பல்லுயி ரெல்லா நிறையப் புசித்திடவே
பாதாதி கேச மளவாகி நேசம் படைத்துலக
மாதா விருந்து திருவறங் கோடி வளர்த்தனளே. (சஉ)

களையற் றறஞ்செய் திருக்கின்ற நாளினிற் காரிகையை
வளமுற்ற நல்லுமை யென்றறி யாமலிம் மண்டலந்தான்
விளைவற்ற தென்றன் பரிவார முண்கைக்கும் வேண்டுமென்றே
அளவற்ற தானியங் கேட்டா னரசனு மாள்விடுத்தே. (சங)

பரிவார மானவர் மற்றுமுண் டானதன் பாரினுள்ளோர்
வருவா ரெலாநித மிங்கிளைப் பாற வரச்சொலெல்லாம்
தருவோ மளவற்ற தானிய மில்லைத் தரநமக்கு
இருநாழி நெல்லுண் டதன்மேற் றரவில்லை யென்றனளே. (சச)

மெல்லியல் சொன்னது தூதர்சென் றேசொல்ல வேந்தர்பிரான்
நெல்லிரு நாழி யொழிந்தில்லை யென்றனள் நெஞ்சமலைபோல்
எல்லையில் லாத களஞ்சிய நிற்கவங் கென்னுடனே
சொல்லிய வார்த்தைக் கபடமெல்லா மின்று சோதிப்பனே. (சரு)

விளைந்ததன் கன்மத்தி னுலுமை யென்னும் விசாரமற்றே
இளந்தலை யாண்டிச்சி யென்றவள் தானிய மத்தனையும்
அளந்துதந் தால்விடு மல்லால் மனித ரனைவரும்போய்க்
களஞ்சியங் கைக்கொளு மென்றுசொன் னுன்பினைக் காவலனே. ()

வெந்திறல் வேந்தன் மனிதரை யேவி விடுத்தவெலாம்
சிந்தையி லேகண் டவன்மீது சற்றுஞ் சினம்புரியா
தந்த நகரினுங் காஞ்சி சிறப்பென் றரன்சொல்கையால்
வந்து புறப்பட் டனள்காசி யின்னின்று மாதுமையே. (சஎ)

மங்கை யருமுட் பரிவாரந் தன்னுடன் வானவரும்
தங்கு மசுரரும் பூத கணங்களுந் தாம்முதலாய்
அங்கிருக் கின்ற புறப்பரி வாரங்க ளத்தனையும்
எங்கு நெருங்கிமுன் போற்புடை சூழ்ந்து வந்தெய்தினரே. (சஅ)

சிறக்குங் களஞ்சியத் துண்டான நெற்கள் சிறகுபெற்றே
பறக்குஞ் சிறிய குருவியைப் போன்முன் பறக்கவுடன்
நிறக்குஞ் சுமங்கல நீள்புறம் பூரவை நீங்கிமற்றே
மறைத்தங் கொருவர்தங் கட்படா மேயுடன் வந்தனவே. (சகூ)

அம்பிகை செய்தநற் பூங்கா வனங்களு மானிரையும்
பைம்புனற் கேணியுந் தண்ணீரின் பந்தரும் பாற்கிணறும்
வம்புறு செங்கழு நீரோ டைகளுள மற்றுமெலாம்
இம்பரு மும்பருங் காணவிண் மேற்பறந் தேகியவே. (ரு0)

மன்னவன் மற்றிவை விண்மேற் பறந்து வருகையினுல்
பின்ன ரறிந்துமை யென்றே வணங்கிப் பிழைபொறுத்திங்
கின்ன மிருந்தறஞ் செய்யென்று வேண்ட விரங்கியங்கே
புன்மை விடத்திங்கண் மும்மாரி பெய்வித்துப் போந்தனளே. (ருக)

சரக்கான வற்றையுஞ் சிங்கா தனத்தா சாட்சியையும்
திரக்கா சினியையு மைந்தனுக் கீந்து சிவன்படிவன்
உரக்கா லிரண்டு நடையினிற் றேய்ந்துபின் னோதலுற்று
மரக்காலை யுங்கட்டி மாதாவைச் சேவித்து வந்தனனே. (௫௨)

நெய்ப்பசு கன்றுக் கிரங்குதல் போலவு நீணிலத்தார்
மெய்ப்பசிக் காக விரங்கி யறஞ்செய்ய வேணுமென்றே
மைப்பசிப் பூதம் புடைசூழுங் காஞ்சி வளநகர்க்கே
ஐப்பசிப் பூரந் தனிலே யுமைவந் தடைந்தனளே. (௫௩)

மதிகொண்ட கண்டிகை மங்கலை யிங்குள மாதவங்கள்
குதிகொண்ட வாறுக டீர்த்தங்க டெய்வக் குழாங்களெல்லாம்
எதிர்கொண்டு சென்று பணிந்தடி போற்ற வெழிலுமையாள்
அதிர்கொண்ட மங்கல வாத்தியத் தோடங் கணுகினளே. (௫௪)

மாப்பொற் பிலங்கு மதிற்காஞ்சி யென்னும் வளநகர்க்கு
மூப்பற்ற மாது வருமுச்சி நேர முகுர்த்தத்திலே
கோப்பற்ற முப்பத் திரண்டறஞ் செய்திடக் கோலியங்கே
காப்புத் த்ரிக்கையிற் காப்பேரி யென்று கனம்பெற்றதே. (௫௫)

நெருக்கிட வந்த பரிவார முன்சுற்றி நிற்கையிலே
தருக்குட னாலெட் டறமுஞ் செய்வோமென்று தன்கையிலே
வரிக்கட கந்தள்ளி காப்பைநன் றாக வதிந்தவிடம்
திருக்கட கம்பள்ளி யென்றால் கேழுஞ் சிறப்புற்றதே. (௫௬)

சோகம் பொருந்திய வெல்லா வுயிர்கட்குஞ் சோறளித்தே
தாகந் தணிக்க வருநா ளெதிர்கொண்டு தான்பதும
நாகம் பணிந்தென் பிலத்தே யுறையென்ன நல்லுமையாள்
யோகம் புரிகைக் கிடமாகு மென்றங் குறைந்தனளே. (௫௭)

மண்ணின் மிசைவந்த பெண்டெய்வம் விண்டெய்வம் வாழ்த்துந்தொண்டர்
எண்ணவொண் ணாதவ ரித்தனை பேரு மிவரன்றியே
விண்ணின் மிசைவந் திறங்கின வற்றுக்கு மேதகவே
நண்ணிடங் கற்பித் தருளினள் தெய்வங்கள் நாயகியே. (௫௮)

மருவுறத் தாண்டு மயில்மீதி லேறி வருகின்றதோர்
பொருவற்ற சேய்பெற்ற பார்வதி யன்பு புரிந்தங்ஙனே
வெருவுற்ற பல்லுயி ரெல்லாம் புசித்திட வேணுமென்றே
திருவறச் சாலை சமைத்தனள் மேன்மை சிறப்புறவே. (௫௯)

இருநாழி நெற்குற்றி யோராட்டை நாளைக் கதனரிசி
ஒருநாழி கொண்டு தினம்விழுக் காடுண்க வுள்ளளவே
வருநாள்க டோறுங் கழுநீர்க ளேந்திட வந்துவிழும்
பெருநீர்க் குழிச்செங் கழுநீரின் சேறென்று பேர்பெற்றதே. (கூ0)

சீரக லாமற் சமைத்தே படைக்கின்ற சேடியர்க்குத்
தாரக மாக வுமையா ளிருந்து தயையும்வைத்தே
பாரக மோடு பதினு லுலகினிற் பல்லுயிர்க்கும்
ஓரகற் சோறுட னோகல் நீருங்கொண் டூட்டினளே. (கூக)

நல்குர வுற்றவ ரெல்லார்க்குஞ் செல்வ நயந்தளித்தே
பல்கலை தீர நடுவுரு வான பரிசதுபோல்
உல்கினி லுட்பசித் தாருள ரோவென்று முய்கையினல்
அல்கதி யிட்டுலகி யாவற்றை யும்பசி யாற்றினளே. (கூஉ)

பெறுவிற் பெறுவித்தல் காதோலை பேணுதல் பிள்ளைக்குப்பால்
மறுவி லுபாத்தி படிப்பார்க் குணவு மடஞ்சத்திரம்
அறுவகை யோர்க்குண்டி யேறறச் சோறிட லையமுன்னே
இறுமுயி ரீட்டல் சிறைச்சோறு திண்பண்ட மெண்மணமே.

கண்ணடி யாவுக் குராஞ்சுகல் வாவுரை காவடைக்காய்ச்
சுண்ணம்பு வாவி விலங்கூ ணறப்பிணஞ் சுட்டல்பந்தர்
தண்ணீர் தலைக்கெண்ணெய் பெண்போக நாவிதன் றன்மருந்து
வண்ணன் வயித்திய னெண்ணன் கறமும் வளர்த்தனளே. (கூச)

மறக்குஞ் சரத்தரைக் காளியை மால்துர்க்கை மாரிவரைச்
சிறக்கும் பெரிய திருக்காம கோட்டத்திற் சேர்ந்துநித்த
நிறக்கின்ற சாலையி லுண்பார்க்குத் தீங்கு நினைப்பவரை
இறக்கும் படிசெய்கைக் குட்காவல் வைத்தன ளேந்திழையே.(கூரு)

இருகல சானி யுடன்காயக் கோப்பளி யெண்கருக்கி
குரவைப் பிரளிசொற் பிட்டா புரத்திநற் கூவலம்மை
அரண்மகிழ் கம்பகம் பாடி யிவர்களை யட்ட திக்கும்
திருவறத் துக்குப் புறக்காவல் வைத்தனள் சேயிழையே. (கூகூ)

இப்பூ தலமுத லிரே ழுலகினி லெவ்வுயிர்க்கும்
முப்போது முண்ண வறக்கொடி வைத்து முழையிற்புக்கே
மைப்போர் விழியுமை பஞ்சாக் கினியை வளர்த்ததிலே
செப்பூசி நாட்டி முனைமே லிருந்தவஞ் செய்தனளே. (கூஎ)

கருகாத செம்முக மென்மேற் பொழியுங் கருணையுண்டாய்த்
திருவான. கையொன்று மார்பில்வைத் தோர்கை சிரத்தில்வைத்தே
இருகாலி லொன்று மடித்தூசித் தீயி னெழுமுனைமேல்
ஒருகாலி னின்று தவம்புரிந் தாளங் குமையவளே. (௬அ)

பவமிக் கிடாமற் பதினு லுலகும் பணைக்கவெங்கும்
சிவமிக் கிடவென்று நின்றே யருந்தவஞ் செய்துமையாள்
தவமிக்கு முத்தி முதிர்ந்துகை கூப்பிய தன்மையினல்
உவமிக் கொணுத சிவபூசை செய்யவென் றுன்னினளே. (௬௯)

நிறைத்திடுங் கங்கை நதிசூழுங் கங்கையு நீங்கியன்று
நறைப்பெருகும் பூவுடன் றன்பிற கேவந்த நந்தனமும்
அறப்பெருஞ் செல்வியு மொன்றம்பி காவன மாமிரண்டும்
சிறப்புடன் பேணிச் சிவபூசை செய்யச் சிறந்தனளே. (௭0)

தேசுற் றலர்ந்தநற் பூமாவி யாதென்று தேடியங்கே
மாசற் றகண்டா வெளியுரு வான வடிவுகண்டே
நேசித் திறைஞ்சிமுன் ஞேத்திரஞ் செய்து நிமலனைத்தான்
பூசிக்க வென்று திருநீறு சாத்திப் புகுந்தனளே. (௭௧)

ஓங்கிய செல்வி யுடனம்பி காவனத் துண்மலரும்
தேங்கிய கம்பைத் திருமஞ் சனமுந் திருவமுதும்
பாங்கியர் பூசைத் திருமுட்டு மேந்தியப் பங்கயக்கை
நீங்குத லின்றி யருகே சுடுதூர்க்கை நீட்டினளே. (௭௨)

அருமந்த வாசகஞ் சொன்னுரை யந்த வடைவுதன்னல்
திருமஞ்ச னம்பண்ணிப் பூமாலை சாத்தித் திருவமுதின்
கருமந்த னைச்செய்து நற்றூப தீபங்கள் காட்டியபின்
ஒருமந் திரத்தைச் செபித்தா லிருந்தங் குமையவளே. (௭௩)

வெறியார் கமழ்கொன்றை பூணுஞ் சடைத்திரு வேகம்பனர்
பிறியா திருந்து தவப்பூசை செய்யும் பிரியத்தினல்
நெறியா ருலகுக் குமையா ளுறுதி நிகழ்த்தவென்றே
அறியாது போலத் திருக்கம்பை யாற்றை யழைத்தனரே. (௭௪)

நெருக்குஞ் சமுத்திர மேழும்வந் தொன்று நிறைகடலாய்ப்
பெருக்குந் தரங்கப் பிரளய காலப் பெருக்கெனவே
திருக்கம்பை யாற்றினிற் சேரவொன் ருகிச் செறிந்துதத்தி
வரவென் றழைத்தனர் நில்லாமல் மேலிட்டு வந்தனவே. (௭௫)

18026O
சென்னை-600 008.

மழுவிற் சிறந்தகை யேகம்ப வாணர்தம் மார்பகத்தே
முழுகத் தனங்கண் முழங்காற் படியிட்டு முன்னிருந்தே
நழுவக் கொடாமல் வளைக்கரத் தாற்கட்டி நல்லுமையாள்
தழுவக் குழைந்தன ருள்ளும் புறம்புந் தழும்புற்றதே. (எசு)

குளிருற்ற மாவி னிழற்கீ ழிருந்துதன் கொங்கைகளால்
தளிருற்ற செங்கை வளைகளி னலன்று தானுமையாள்
ஒளிவுற் றகண்ட பரிபூ ரணமாகி யோங்குகடு
வெளியைத் திரட்டி யதிலே குறியிட்டு விட்டனளே. (எஎ)

ஆதியிற் றேவர் தவமோ வுமையி னருந்தவமோ
நீதியி னாலே கலந்திட்ட யோக நிறைவதுவோ
மாதுமை கையி லணியான சோதி வளைத்தழும்பும்
சூதொக்கு கொங்கைச் சுவடு மணிந்தனர் தூய்தகவே. (எஅ)

அரன்குழைந் திட்டது கண்டுவிண் ணோர்முத லானசரா
சரங்க ளனைத்து முருகி யுடலுயிர் தானென்றதாய்
இரங்கி யுமைக்கரன் மெல்லிய னாகுமென் றேத்திமிகப்
பரந்த மலர்மழை பெய்யமுன் கம்பை பணிவுற்றதே. (எகூ)

பேற்றுக் குமையவள் முன்னே நடந்த பிரளிகண்டே
காற்றுத் தனிலுங் கடுகிவந் தார்கைக் கபாலத்தினால்
எற்றிட்ட போதி லெதிரே பெருகிவந் தேறுகம்பை
யாற்றுப் பிரளய மெல்லாம் புகுந்தங் கடங்கியதே. (அ0)

பூண்டவ ராகம் புலித்தோ லுடையும் புரிசடையும்
மாண்டவ ரென்புந் தழுவக் குழைந்த வடிவுங்கொண்டே
நீண்ட விடையில் வெளியாக வேவந்து நின்றுமையே
வேண்டும் வரங்களைக் கேளென்று நாதர் விளம்பினரே. (அக)

பாவங்க ணீங்கிப் பதினா லுலகினிற் பல்லுயிரும்
மேவும் படிக்கு வரந்தந்திவ் வூரினில் மேவுகின்றூர்
நாவங் குரைப்பவை தோத்திர மாக நடப்பவெல்லாம்
நோவங் கிலாப்பிர தக்கண மாக நுவன்றருளே. (அஉ)

எண்ணிய நன்மையொன் றோர்கோடி யாகவிங் கெல்லையிலாப்
பண்ணிய பாவங்க ளொன்றாகித் தேயப் பறித்தவெல்லாம்
திண்ணிய பத்திர மாகத் துயின்றதுந் தெண்டனவாய்
நண்ணு மை கேட்ட வரங்களெல் லாமரு னல்கினரே. (அங)

இன்றடி யேன்செயும் பூசை முடிவுற் றிடும்படிக்குத்
தூன்று வரந்தந் தருளென் றுமைசொலச் சூதர்சொல்வார்
என்றுநின் பூசை முடியா தினியு மினிதிருந்தே
ஒன்றிய பூசை புரிந்தறஞ் செய்யென் றுரைத்தனரே. (அச)

ஈண்டிய நாலெட் டறங்களு நாடொறுமி யாவருக்கும்
வேண்டிய நேரங்க ளெல்லாம் விளைந்திட வேண்டுமென்றே
ஆண்டுக டோறு மிருநாழி நெற்படி யாங்களித்தே
பூண்ட தழும்பின ரேகாம் பரத்திற் புகுந்தனரே. (அரு)

அருவம தான வரனு ருருக்கொண் டணுகிவந்தே
திருவருட் செய்த பெருமையுள் ளேகண்டு தேகமெல்லாம்
மருவு புளக மெழவிழி நீர்விட வாழ்ந்தங்ஙனே
உருகி யுருகி யிருந்தாள் மகிழ்வுற் றுமையவளே. (அசு)

எடுத்த கபாலத் தகப்பட்ட தீர்த்தங்க ளித்தனையும்
குடிப்பவன் றேங்கி யுமையாளை நோக்கிமுன் கூப்பிடவே
தடுத்த பிரளி தனைவிடு மென்றுமை சாற்றுகையால்
விடுத்த கபாலப் பெருந்தீர்த்த மென்று விளம்பினரே. (அஎ)

ஆற்றுப் புனலை யடக்கும் பிரளிக் கருள்புரிந்தே
ஏற்றுப் பரனை யிறைஞ்சிய பேருணை யேத்திச்சென்றால்
பேற்றுக்கு மட்டில்லை யுன்றாள் வணங்கப் பெறுதவர்க்குச்
சாற்றிற் பலமின் றெனவர மீந்தன டானுமையே. (அஅ)

முலையால் வடுப்பட்ட வேகம்ப வாணரை முப்பொழுதும்
மலையான் மகள்சென்று பூசனை செய்ய வழங்கியதால்
அலையா மலற்பேந் திரமேவி மேல்வந் தறம்வளர்த்து
நிலையாக விங்கிருந் தாளடி யார்பவ நீங்கவென்றே. (அகூ)

அன்பொன்று கின்ற கயிலாயர் சந்நிதி யன்றுசென்றே
முன்பிங் குமையுடன் வாழ்மணக் கோல முறைமைதன்னை
இன்பம் பெறவெமக் கின்னமுங் காட்டென் றிறைஞ்சிடவே
தென்பங்கி லேசென் றுமையா டவஞ்செய் திறஞ்சொல்லியே. (கூ0)

உமையோ டுறையு மணவாள கோல முலகில்வந்தே
நமையா தரியுநற் காஞ்சியி லேயென்று நாதன்சொல்ல
அமைவாக வாண்டுக டோறுமி யாங்காணென் றுதரித்தே
இமையோர்க ணிற்பக் கயிலாயர் தாம்வர மீந்தனரே. (கூக)

கயிலையின் மேனின்று காஞ்சியி லேவந்து கந்தனுடன்
மயிலுமை யாளுஞ் சிவனுருங் கூடி மகிழ்ந்திருப்ப
துயிலறி யாத வமரரெல் லாம்வந்து தோத்திரமே
பயிலும் வகைசெய்து கண்களி கூர்ந்து பணிந்தனரே. (௬௨)

எல்லையில் லாத திருப்பணி யுஞ்செய் தெழில்பெறவே
சொல்லிய வாழ்வு முதலா யிரத்துத் தொளாயிரமாம்
பல்படி யான நிமந்தமுங் கட்டளை பண்ணியன்பாய்
அல்பக லுந்தா மரும்பூசை கம்பர்க் கமைத்தனரே. (௬௩)

சமையத் திருவறச் சாலை புதுக்கித் தரும்படிக்கே
நிமந்தமுஞ் செய்து திருக்கோயில் கட்டி நெறிபுரிந்தே
அமங்கலி வைத்த திருவமு தேகொண் டருள்சுரந்தே
சுமங்கலி பூசிக்க வென்றழைத் தார்நிதந் தொல்லுமைக்கே. (௬௪)

சோக மறுத்துப் பதினா லுலகினிற் றெல்லுயிர்க்கும்
போகமும் புண்ணிய பாகமும் பண்ணிப் புனிதமுடன்
யாகம் வளர்த்திங் கழகார் சிவாகமத் தின்படியே
வேக மிகுத்த விடைக்கொடி யேற்றினர் மேதகவே. (௬௫)

எருத்தங்கு பாலிகை வைத்தே முளைதெளித் தேகம்பர்க்கும்
பொருப்பங் கிளைக்கும் முதற்காப்புக் கட்டிப் பொருத்தமுடன்
விருப்பம் பயிலுந் திருக்கலி யாண விதிப்படியே
திருப்பங் குனியிற் றிருநாள் நடாத்தினர் சீர்பெறவே. (௬௬)

காலை விழாவைத் திருக்கோயி லாக்கிக் களித்துநித
மாலை விழாவைத் திருவீதி யாக்கி வசந்தமுற்றும்
சீலமோ டேழில் திருத்தேரு மோட்டித் திருக்காப்புமாய்க்
கோலமொ டொன்பதி லேதிருச் சாந்தையுங் கொண்டனரே. (௬௭)

ஒன்பது நாளும் விழாப்போது மாற்றிப்பின் னுத்தரநாள்
மன்பெரு மீசற் குமைமாது தன்னை மணம்புணர்த்தி
நன்பரி வோடுந் திருக்கலி யாண நடத்தியரன்
இன்புற விட்ட விருநாழி நன்னெல்லு மீந்தனரே. (௬௮)

செங்கழு நீர்மலர் தீபஞ் சுகந்தந் திருவுறுப்பு
மங்கல மானவை யாவையுங் கொண்டு மகிழ்ச்சியுடன்
இங்கொரு கன்னிகை யற்பேந் திரத்தி லிழிந்துசென்றே
அங்குமை யாடனை யர்ச்சித்து மீள்கைக் கமைத்தனரே. (௬௯)

ஆறணிந் தார்மன்றி ஞடல்கொண் டாரிவ ரவ்விடத்தே
கூறுமன் பால்வந்து வாழ மருந்துதங் கொங்கையிலே
வீறுற வைத்து பதின்மூன்று நாளில் விழாமுடித்தே
ஏறுங் கொடியை யிறக்கினர் வானத் திமையவரே. (கOO)

சங்காழி செங்கையாற் பங்கர ஞரைத் தழுவிக்கொள்ளப்
பங்குனி நன்மாதத் துத்தர நாள்வெளிப் பட்டமையால்
அங்கது தன்னில் திருக்கலி யாணமொ டற்பேந்திரம்
தங்கிய தீர்த்தங்க ளெல்லா மமைத்தனர் தாழ்வறவே. (கOக)

தண்ணித் திலக்கொங்கை யானையைக் கம்பந் தனிலணைத்தே
பெண்ணிற் றிலதமனையாள் குழைவித்த பேறுதன்ஞல்
கண்ணுற் றுமைக்குச் சிவன்வர மீகையாற் காஞ்சியின்பேர்
திண்ணிற் சிவபுரக் காஞ்சியென் றெங்குஞ் சிறப்புற்றதே. (கOஉ)

அண்டரெல் லாரு மபயமென் றேவர வஞ்சலென்றே
திண்டிற லீச ஞெருசத்தி யேவிடச் சென்றவடான்
கொண்ட பிரளய மெல்லாம் விழியிற் குடிக்கையினல்
மண்டு பிரளயக் காஞ்சி யென்றெங்கும் வழங்கியதே. (கOங)

கல்லுக்குக் கீழ்பொன் முகரிக்குத் தெற்குக் கடற்குடபால்
நல்லுற்ற பெண்ணை வடக்கிந்த வெல்லை நகர்தனக்குள்
மல்லுற்ற காஞ்சி சிவபுரக் காஞ்சி மருவியதோர்
தொல்லைப் பிரளயச் சீர்க்காஞ்சி யாச்சென்று சொல்லுவரே. (கOச)

சித்தர் முதற்றேவர் மானுடர் யாவருஞ் சேர்ந்ததிலே
எத்தனை காரியஞ் சங்கற்பித் தேகொண் டிருந்திடினும்
அத்தனை யுந்தின மோரெட்டி லேசித்தி யாகையினல்
சத்தி மிகுஞ்சர்வ சித்தி தருங்காஞ்சி தானென்பரே. (கOரு)

சத்திய வாணி பிணங்கிமுன் போகச் சதுர்முகன்வந்
துத்தர வேதியில் மாயோனைக் கண்டிட வுன்னியங்கே
மெத்திய காயத் திரியுடன் கூடி விருப்பமுற்றே
சுத்தம தான பெருவேள்ளி செய்யத் தொடங்கினனே. (கOசு)

அதுகண்டு வாணி சினமெய்தி வேள்வி யழிக்கவென்றே
நதியென் றுருக்கொண்டு வேகத்தி னல்வர நாரணன்போய் [லால்
எதிர்கொண்டு தான்பள்ளி கொள்வதுந் தள்ளிமுன் னெய்திட
சதிர்கொண்டு பாற்கடற் றன்மேற் றுயின்று தகைந்தனனே. (கOஎ)

தடுத்தது தள்ளி வரமாயன் கோபித்துத் தானதனைக்
குடித்திட வென்றிடக் கைகீழ தாகக் குளிர்பொய்கைக்கே
படுத்தது கண்டுமுன் பாதாளம் புக்குப் பயந்தமையால்
படைத்த பிரமன் றபோமயக் காஞ்சிப் பதியென்பதே. (கoஅ)

பாதாளம் புக்கிடும் வாணி மனத்திற் பயத்தையெல்லாம்
ஞாதாவ தாகிய நாரணன் தீர்த்து நலம்பெறவே
வேதா வுடனங் குறவாகக் கூட்டி விடுகையினல்
ஆதார மாகிய வேள்விசெய் தாரவ ரங்கிருந்தே. (கoக)

நண்ணிய வாணியு நான்முக ஞரு நயந்துசெய்த
புண்ணிய யாகத்தின் மாயோ னெழுந்து புகன்றதொரு
புண்ணிய கோடி யெனவர மீகையிற் பூதலத்தோர்
புண்ணிய விண்டு புரக்காஞ்சி யென்று புகலுவரே. (கக0)

சிங்க புரந்தெற்கு மேற்கு விரிஞ்சையுஞ் சீர்வடக்கு
பொங்கும் புகழ்நா ரணபுரங் கீழ்மா பலிபுரமாந்
தங்கிய வெல்லை யிதிற்சர்வ சித்தி தபோமயநீள்
பொங்கிய விண்டு புரக்காஞ்சி யென்றிதைப் போற்றுவரே. (ககக)

கருங்கண்டன் மார்பங் குழையத் தழுவிக் கனதனத்தால்
நெருங்கும் படிக்கு வடுவிட்ட மாதுமை நீடருளால்
வருங்கன்னி தானிங் கிருந்தே யிரட்சித்து வாழ்கையினல்
பெருங்கன்னி காப்புநற் காஞ்சியென் றெங்கும் பெயர்பெற்றதே.

தொகுத்தே யுரைக்கின்ற மூவுலகத்தையுந் தூக்கியிட்டால்
மிகுத்தே யிருப்பது பூமியப் பூமியின் மேற்பதிக்குள்
பகுத்தே யழித்திடப் புண்ணியஞ் சாரப் பலமதனல்
செகத்சாரக் காஞ்சியென் றேயுரை யாகிற்குந் தேசங்களே. (ககங)

முந்து பிரமனு மாயோனு மீசனு மோகமறத்
தந்த பதியினு நன்மூ யிருக்குந் தலமிதென்றே
வந்தந்த மூவருங் கூடி யிருந்திங்கு வாழ்கையினல்
இந்த நகர்திரி மூர்த்தி புரமென் றியம்புவரே. (ககச)

வடக்கூறற் கீழ்த்திசை சீய புரந்தெற்கு மன்னுமோத்தூர்
குடக்கான காவை யிவையெல்லை யாகக் கொழுங்கன்னிகை
அடிச்சே ரிடச்சை பெருஞ்செகற் சார மருள்புரிந்தே
திடச்சேர் பெருமுற் றிவசங்க ளாச்சென்று செப்புவரே. (ககரு)

என்னென்ன காரியம் வேண்டுமென் றார்க்கு மிவையன்றியே
நன்னெறி முத்தியை வேண்டுமென் றார்க்கு நயந்தவற்றை
யுன்னி யளிக்கு மொருகாம பீடமுண் டுண்மையினால்
மன்னகர் காமபீ டக்காஞ்சி யென்று வழங்கியதே. (௧௧௬)

சென்றேறு தீர்த்தந் திசைதோறும் வைத்துச் சிறப்புறவே
நன்றே புரிகின்ற தாண்டக்கி யன்வந்து ஞாலமெல்லாம்
தன்றேர் செலுத்தி யரசாண்டு கொண்டித் தலமிருப்பா
மென்றே யிருந்தபின் வேட்டைசென் றான்மன்ன னேக்கமற்றே.

காட்டினில் வேட்டை தனையாடி மீள்கையிற் கண்டுதண்ணீர்
வேட்டன னென்றிடப் பிங்கலர் பாரியும் மேவநன்னீர்
நீட்டிய போதவ டன்னைப் பிடித்து நெடியதண்டுள்
போட்டுவங் தூரிற் புகுந்திருந் தானப் புரவலனே. (௧௧௮)

பிங்கல யோகி சரகாதி கொண்டு பிறகுவந்தே
அங்கவர் பத்தினி காணாமல் ஞானத் தறிந்துசென்றே
இங்கிவர் மந்திரி நால்வர் புரோகித ரென்றிவர்கள்
தங்களைக் கேட்க விடுக்கவொண் ணாதென்று சாற்றினரே. (௧௧௯)

அரசனைக் கண்டுதன் மாடுவீ டென்ன வவளைவிடா
துரைசெயக் கேட்டபின் பிங்கலர் கோபித் துடனிந்தவூர்
விரைசெயுங் காஞ்சிவன் மாயப் புரோகிதர் வேடர்களாய்
நிரைசெய்த மந்திரி வன்சம னாகி நிகழ்ந்திடவே. (௧௨௦)

ஆண்டுற்ற பட்டத் திபமுத லாக வவன்றனையே
நீண்டுற்ற மோகத்தி லாயிரம் பேர்தனை நித்தந்தின்றே
பூண்டுற் றுழலும் பெரும்பூத மாகமெய்ப் போகமற்றே
தாண்டக்கி யன்றனைப் பேடிய தாகச் சபித்தனனே. (௧௨௧)

பேடிய தானபின் தாண்டக்கி யன்வந்து பிங்கலன்றாள்
நீடுற நின்று பணிந்தன்ன சாபத்தை நீக்கிடென்றே
வாடுதல் கண்டு கரிகால னிங்கு வருவனன்றே
கூடிய சாபம் விடவே வரத்தைக் கொடுத்தனனே. (௧௨௨)

சீறுற்று மீண்டு வரங்கொடுத் திட்டுத் திருமுனிவன்
வீறுற்று மாதவஞ் செய்வதற் கேக விசைப்பொடுமுன்
மாறுற்று வாழ்ந்திட்ட மன்னவ னாலிந்த மாநகர்தான்
பேறுற்ற தாண்டகக் காஞ்சியென் றேயெங்கும் பேர்பெற்றதே.

திருநீல கண்டங் கிழக்குப்பல் லாபுரந் தெற்குமொரு
வருநீ டிரணிய ணூர்மா புரம்வாழ் வடக்கதனில்
கருநீடு மெல்லை யிதிலயன் வாஞ்சைகொள் காமபீடம்
மருணீடு தாண்டகக் காஞ்சியென் றேசொல்லு மம்புவியே. (கஉச)

காஞ்சி சிவபுர நீடும் பிரளய காலசித்தி
பூஞ்சர்வ சித்தி தபோமயம் விண்டு புரங்கன்னிகாப்
பாஞ்செகற் சாரந் திரிமூர்த்தி வாச மயன்புரமே
வாஞ்சைகொள் காமபீ டந்தங்கு காஞ்சி வனமென்பரே. (கஉரு)

அல்லாத பாதகஞ் செய்யந் தணனை யரக்கன்கொண்டு
பல்லாண்டு பையாலின் கீழிருந் தேகச்சிப் பன்னிருபேர்
சொல்லாடக் கேட்டந்தப் பாதகம் போய்ப்பூ சுரனிறங்கி
எல்லாருங் காணவிப் பேர்செபித் தேமுத்தி யெய்தினனே. (கஉசு)

பன்னிரண் டானவிப் பேர்செபித் தான்மக பாதகம்போய்ச்
சொன்னவிப் பேர்தொறு மெண்ணற்ற காலந் தொலைந்துசென்ற
பின்னைமுற் சாபத்தி னுன்மாய்ந் திடப்பெருங் காலஞ்செல்ல
மன்னிய சாபங்க ளெல்லாங் கெடுத்தநாள் வாழ்விக்கவே. (கஉஎ)

கரிகாலன் தோன்றிமுன் காவேரி தன்னைக் கரைகட்டியே
அரிகா ணுைத்திரு வம்பலந் தெண்டனிட் டங்குநின்றும்
பெருகாசிக் கங்கைநன் னீராடி மேருவின் பின்புறத்தே
பொருகானவெற்றிப்புலிபொறிப்போமென்றுபோந்தனனே. (கஉஅ)

கொற்றவன் வந்தபின் செய்யாறு சேரக் குறித்தொருவன்
உற்ற நிமித்த மொருசண்டை யாமென் றுரைத்திடவே
மற்று நமக்கெதி ருண்டோ வெனவிந்த வையமெல்லாம்
துற்ற பெரும்படை காஞ்சிப் புரத்தின்முன் றோன்றியவே. (கஉகூ)

இந்த வனத்தினில் வந்தவ ராரென் றெழுந்துசென்றே
முந்திய சாபத்தில் வேட ரிருவரு மூண்டெய்யவே
சிந்து கணைகளொன் றுயிர மாய்த்தைத்துத் தெய்விகமாய்
வந்த படைகள் முறிந்தோடக் கண்டனன் மன்னவனே. (கங௦)

அதிசயங் கேட்டுக் கரிகால சோழ னழையுமென்றே
விதமுறு முத்திரை மோதிரப் பேர்விட வேடர்கண்டே
கதியுறு கானத்தி லுண்டாந் திரவியங் காணிக்கைகொண்
டெதிருற வந்து பணிந்துநின் றூர்க ளிறைவனையே. (கஙக)

அப்போது வேடரை யெங்கிருப் பீரென் றருள்செய்யவே
எப்போது மிவ்வனங் காப்போ மெனவடக் கேநமக்கிங்
கிப்போது நீங்கள் வழிகாட்டு மென்ன விருவருமாய்
ஒப்போடு செல்ல வழிகாட்டி னார்மன்னற் கொக்கவந்தே. (கஙஉ)

சாப முயல்வந்து பட்டத்து யானை தனைத்துரத்தப்
பூபதி கண்டஞ்சி வேடரைக் கேட்கப் புராணமெல்லாம்
நீபத ருமை லடியினுங் கேளென்று நேசமுடன்
பாபமில் லாவிக் நகர்வந்த வாறும் பகர்ந்தனரே. (கஙங)

அன்றுமை வந்தது தான்முத லாக வடைவுடனே
வென்றிகொ டாண்டக் கியன்சாபப் பட்டு விளம்பினதும்
துன்றுமிவ் வூரின் புதுமைசொல் லத்தொலை யாதினியாம்
இன்றிங் கறிந்ததைக் கேளென் றரசற் கியம்பினரே. (கஙச)

ஆண்டா சருநெல் லிருநாழி கொண்டிங் கறம்வளர்க்கப்
பூண்டா ளுறைகின்ற காஞ்சிப் புரத்தின் புதுமையொன்றே
நீண்டா னவனிலும் பேரொளி யாகி நிறைபிலத்துத்
தூண்டா விளக்குப் பதினா லுலகுஞ் சுடர்விடுமே. (கஙரு)

கோடா வரசு மழைநாடி வெற்பைக் குறித்துவைத்த
வாடாத செங்கழு நீர்மலர் மூன்று மனித்தர்கையால்
ஆடாத செக்கு மரையாத வம்மியு மற்பேந்திரத்
தூடா விளக்கு மிருந்தேயெப் போது மொளிதருமே. (கஙசு)

சந்திர சூரியர் தாரா கணங்கள் சகலருந்தாம்
கொந்தலர்ப் பூங்குழற் காமாட்சி யார்திருக் கோயிறனை
வந்து பணிந்து வலமாகி நித்தம் வருகையினால்
தந்திசை யார்க்குந் தெரியாது காணித் தலந்தனக்கே. (கஙஎ)

கூறு சமயங்க ளாறுந் தவங்கள் குறைவறவே
பேறு பெறவென்று நின்றே யருந்தவம் பேணுகையால்
ஊறிய வன்பொடு தாந்தாம் வலம்வந் துமையவளை
ஆறு சமயத் தலைவியென் றேசொல்லு மாரணமே. (கஙஅ)

ஒருநன்மை செய்யி லொருகோடி யாமென் றுமைக்கரனார்
தருநல் வரங்கண்டு வானோ ரெலாம்வந்து தங்கடங்கள்
பெருநன்மை செய்யுங் குலதெய்வந் தன்னைப் பிரதிட்டையால்
அருணல்ல தெய்வங்கள் வாழ்கோயி லிங்கோ ரளவற்றவே. (கஙகூ)

வீசிடக் கற்கொண் டெறிந்தே யொருபத்தன் வீடுபெற்றான்
மாசறுத் தன்று தரக்கந்தை வாங்கி மழைபெய்ததால்
ஆசி லவன்றலைக் கன்மே லடித்தன் றருளைப்பெற்றான்
பேசி லளவுந் தெரியாது பேறிங்கு பெற்றவர்க்கே. (க௪௦)

முழுகார்க ளூர்த்தங்க டான மிடார்கள் முயறவத்தின்
ஒழுகார்கள் மாபஞ்ச மாபாத கங்க ளுறுமவற்றால்
அழுகா விழுமெய் யுடையார்க ளாயினு மாதிகச்சிக்
கெழுகாத மென்ன வரினும் பிறப்பில்லை யாவர்க்குமே. (க௪க)

ஒருபூதம் வண்மை யிருதானம் வேதிகை யோர்மூன்றுடன்
வருநான் முனியைந் தருவாறு புள்ளேழு மாநதியோ
டருள்சேர் பொதுவெட்டுப் பொய்கையொன் பான்பத் தரியகல்லுத்
திருவார் பதினொரு மன்றமிவ் வூரிற் சிறந்தனவே. (க௪௨)

உறவாடு நல்லுயி ராயிர நாடொறு முண்டுமிழ்ந்து
மறவாம லிங்குறை மாபூத மொன்றுண்டு வந்தடைந்தோர்
இறவாத தானமுந் தன்னிடத் தேவந் திறந்தவர்பின்
பிறவாத தானமு மென்றிரு தானம் பெரியவையே. (க௪௩)

ஆனை முதலெறும் பீறான பல்லுயி ரத்தனைக்கும்
போனக நீரு மளித்திடும் வேதிகை போனவர்க்குத்
தானினை வின்படி யீந்திடும் வேதிகை தானினைந்தால்
மோனநல் லூமர் மொழிந்திடும் வேதிகை மூன்றிவையே. (க௪௪)

அழுக்கொன் றிலாத சிறுகா ரமண ரயனிறமாம்
விழுப்பெருந் தாய ரரிநிற மாஞ்சிவன் மெய்ந்நிறமாம்
ஒழுக்கங்குன் றாரிந்த மும்மூர்த் திகணிற மொப்புடையார்
இழுக்கொன் றிலாதநல் யோக முனிவர்க ளீரிரண்டே. (க௪௫)

கன்னி யொருத்தி தொழுமா வருந்தவங் காலசித்தி
துன்னிக் கனிதருங் காயாப் புளிக்கதி சூழ்வரினும்
தன்னிழல் விட்டுப் பிரியாத காஞ்சிமுன் றான்வேண்டுபூ
மன்னு மிருப்பை சுரர்நோக்கு மத்தி மரங்களைந்தே. (க௪௬)

இறைவ னுடனிந்த மாநக ரானதற் கின்பமுற்றே
குறைவருங் காலங்கள் கூவாத கோழி குறைவறவே
அறுவகை நூல்கள் மொழியுங் கிளிநின் றருந்தவத்தின்
நெறிபுரி திங்க ணவமணி யீந்திடு நீளன்னமே, (க௪௭)

சீத மழைபெய்த லில்லாத காலமுன் செந்நெலெல்லாம்
போத விளைவித் திடுஞ்சக்ர வாகம் பொழிலிடத்தே
சோதிடச் சாத்திரஞ் சொல்லிடு மாந்தை சுரார்க்கமுதம்
ஆதர வால்நல்கு சாதக மென்றிவை யாறுபுள்ளே. (கசஅ)

சிலைத்திடுந் துங்கப் பெருங்கட லேழுஞ் சிறப்புடனே
கலிச்சியு மண்ணியுஞ் சிப்பியு மஞ்சனக் காலுமென்மேல்
அலைப்பயில் பம்பையும் வெஃகாவுங் கம்பையு மாகியிங்கே
நிலைப்பட வூன்றி யெழுநதி யாக நிகழ்ந்தனவே. (கசகூ)

பேடொன்றி வாழும் பொதுமுய லானையைப் பின்தொடர்ந்தே
ஓடும் பொதுவிசைப் பண்ணையெப் போது மொழிவறவே
பாடும் பொதுவொரு தாளியிற் றீபம் பரந்தவொளி
நீடும் பொதுநெடு மால்பள்ளி கொண்டருள் நீள்பொதுவே. (கரு0)

முந்திய வாச்சிய மெப்போதும் புற்றின் முழங்குபொது
தந்திசை யார்க்குந் தெரியாப் பொதுதடந் தன்னிற்றண்ணீர்
சிந்தைசெய் தால்வந்து முன்னிற்குங் கூவல் சிறந்தபொது
இந்த வகையெட்டு நற்பொது வாகி யிருப்பனவே. (கருக)

முன்னெழு கின்ற பிணிதீர்த்திடும் பொய்கை மூழ்கினர்க்குப்
பொன்னிற மாக்கிடும் பொய்கையு மன்னவன் பொன்னிடுங்கால்
தன்னிற மாக்கிடும் பொய்கையு ஞானந் தரும்பொய்கையும்
துன்னிய வீசன் கழல்காட்டும் பொய்கையுந் தூயமற்றே. (கருஉ)

காலங்க ணூற்றையுந் தோற்றிடும் பொய்கையுங் காதலர்க்குச்
சீலங்கொள் மாதர்க்குத் தெய்வீகப் பொய்கையுஞ் செல்வநல்கிக்
கோலஞ்செய் பொய்கையு மோரிடஞ் சித்திக் குளிர்பொய்கையும்
மூலங்க ளொன்பது பொய்கைக ளான முறையிவையே. (கருங)

மேவுநோய் தீர்க்குறுங் கல்லும் விடந்தீர்க்கும் வெள்ளிக்கல்லும்
கோவு நிலைதருங் கல்லுந் துணித்தமெய் கூட்டுங்கல்லும்
தாவி னடுச்சொல்லுஞ் சக்கரக் கல்லுமுன் சார்ந்தவரைத்
தேவர்க ளாக்கி யிடுகின்ற தோர்பெருந் திண்மைக்கல்லே. (கருச)

சொன்னங் கொடுத்தவர்க் கீதென்றுந் தோரணத் தூயகல்லும்
முன்னுயிர் மெய்விட் டுயிர்வே றுடலினில் மூட்டுங்கல்லும்
மன்னும் படைவரிற் றேன்றவொட் டாக்கல்லும் வந்துகண்டார்
கன்மங்க டீர்த்திடுங் கச்சிக்கல் லோடிவை கல்லுபத்தே. (கருரு)

கொழுநர்ப் பழித்தோர் பிறர்மனை நட்டோர் குருவைவைதோர்
பழிபல செய்தோர் பழவினை யாளர் பயனென்றிலா
அழிதொழி லாளர் வரில்முங்கை யாக்கி யடுமன்றமும்
தொழில்புரி கள்ளர் சுழன்றிடத் தானுஞ் சுழல்மன்றமும்
வழுவில் கறுப்புப் பசுவேட்ட வெண்மைகொள் மன்றமுமே. (கருசு)

வேத முதனூல்க ளோத நெறிதரு மேன்மன்றமும்
போத நெறிகாட்டு மன்றமுந் தாமுந்தம் போலவுற்றார்
ஏத மறக்காணு மன்றமும் பண்டங்க ளீந்தவர்க்கு
மாதிரி யாக நவமணி யீந்தருள் மன்றமுமே. (கருஎ)

அரனார் வழிவரு மந்தணர் கோட்டி யமர்மன்றமும்
சுரரமு தந்தங்கு சக்கரக் கால்கொளுந் தூய்மன்றமும்
வரும்பகைக் காயுத மீந்திடு மன்றமு மாமழைதான்
விரவி விடாமற் பொழிகின்ற மன்றமு மேன்மையுடன்
இரவு பகலாக் கிடுமன் றமும்பதி னென்றிவையே. (கருஅ)

இத்தனை யல்ல வநேகம் புதுமையுண் டின்னமுங்கேள்
செத்தவர் தம்மைப் பிழைப்பிக்குங் கல்லொன்று தீண்டினரை
மெத்த வுருவம்பொன் னாக்கிடுங் கல்லொன்று வெட்டவந்தார்
கைத்தலத் தாயுதம் வாங்குங்கல் லொன்றுதன் கைப்பணிபோல்
வைத்த பழுதைக டோற்றுங்க லொன்றின்ன மட்டிலையே. (கருகூ)

உருவந் தெரிந்துரை கேளா விடமொன் றுருத்தெரியா
அருவம தாயுரை கேட்கின்ற தோரிட மாடவர்தாம்
பருவ மகளிரைப் போல்வது மோரிடம் பாவையர்தாம்
மருவும் புருடரைப் போல்வது மோரிடம் மட்டில்லையே. (கசூ0)

தேன்கிண றொன்று நிழலைப் பிணிக்குஞ் செழுங்கிணறொன்
றான்கிண றொன்று தயிர்க்கிண றொன்றுநெய் யூற்றெடுக்கும்
வான்கிண றொன்றுநற் பாற்கிண றொன்றின்ன மட்டற்றதாம்
நான்கிண றொன்றித் தொலையாது காணிந் நகரிடத்தே. (கசூக)

உமிழ்நஞ்சு நீர்ப்பொய்கை போன்றது நிற்கு முதகமொன்று
கமழ்பங் கயங்க ளிராமாறி நின்று கமழ்ந்துதரும்
அமிழ்தின் சலமொண் பருத்திக் குழியொன் றதனருகே
குமுதம் பகலே யலரும் பனிமதிக் குட்டமொன்றே. (கசூஉ)

ஒருதாளின் மூன்றுசெங் தாமரை பூத்திடு மோர்பொய்கைநீள்
பெருவா னரத்தின் முகமொக்கு மோர்பொய்கை பேணுகின்ற
திருவான பண்டை முகமாக்கு மோர்பொய்கை சிப்பிபடு
மருவான பொய்கைக ளின்னுஞ்சொன் னுலொரு மட்டில்லையே. ()

மேனேக்கு மாறு பலபிலத் தேபுக்கும் வெள்ளமெல்லாம்
தானேக்கி னுலுந் தெரியா நதிபல சார்வின்றியும்
பூநோக்கு மாறு பொழியும் வழிபல பூமியின்மேல்
வானேக்கு மாறு வந்தேறும் வழிபல மட்டில்லையே. (கசூச)

அறுக்க வறுக்கத் தொலையா வயலொன் றரிசியதாய்ச்
சிறக்க விளையும் வயருனு மொன்று திறம்புரிந்தே
மறித்தும் விளைத்திட வன்றே விளையும் வயலுமொன்று
குறித்த வயலிற் புதுமைசொன் னுலொரு கோடியுண்டே. (கசூரு)

பாங்காக மூன்று பொற்பூவது பூக்கும் பருத்தியொன்று
நீங்காத வில்லமொன் றேங்கும் பலாசொன்று நீழலில்வாழ்
ஓங்காரத் துட்பொரு டன்னையுள் ளேகண் டொழிவறவே
தூங்கா திருந்து தவஞ்செய்யும் பேர்க்குத் தொலைவில்லையே.(கசூசூ)

திடஞ்சேர்ந்த பூமி வடிவான தெய்விகத் தீர்த்தமொன்று
தடஞ்சேர்ந்து மூழ்கிடிற் புண்ணியம் போதத் தருவதொன்றிங்
கிடம்பேர்ங் திடாமற் பறந்திடுந் தீர்த்தமொன் றேருடையா
னுடன்போங் திடுந்தீர்த்த மெல்லாந் திரளொரு தீர்த்தமுண்டே. ()

வருநாக லோக மொருதீர்த்தங் காட்டும் வளர்கயிலைத்
திருநாடு தன்னை யொருதீர்த்தங் காட்டுஞ் சிறப்புடைய
சுரர்நாடு தன்னை யொருதீர்த்தங் காட்டுநற் றென்னகரத்
தருநாடு காட்டு மொருதீர்த்த மூழ்குந் தவர்களுக்கே. (கசூஅ)

வானவர் தீர்த்த மொருகோடி தீர்த்த மருவிலன்ன
தானவர் தீர்த்தந் தருகூல தீர்த்தஞ் சகலருக்கும்
ஊன மறுக்கின்ற தீர்த்தங்க ளெண்ணி லொருமட்டில்லை
நானுரை செய்யத் தொலையாது காணிங் நகரத்திலே. (கசூகூ)

வாடலில் லாத கழுநீருங் கஞ்ச மலருமற்றோர்
பாடல நீடு வதுபார்க்க வந்த பரமனைப்போல்
தோடலர் கொன்றையு நிற்கத் திருவடித் தொண்டரைப்போல்
கோடலங் கேநின்று செங்காங் கூம்பிமுன் கும்பிடுமே. (கஎ0)

சுரர்சூழுஞ் சோதி யிருளோட்டு ருத்திரர் சோலைதன்னல்
பரமேச் வரிபிலத் தூண்டா விளக்கின் படரொளியால்
நிரையாம் வனத்தினற் றீபங்க ளெங்கு நெருங்குகையால்
இரவா னதுபக லானதற் கொத்திடு மிந்நகரே. (கஎக)

வரங்கொள்கை யால்மண லெல்லாஞ் சிவலிங்க மாகிவரத்
தரம்பெற லாலும்ப ரெல்லா மரன்வனந் தங்குகையால்
நிறைந்த கொடிகளெல் லாமுமை யாளதில் நிற்கவெல்லாம்
பரந்திடுந் தீர்த்த மனித்தர்விண் ணோரினிற் பண்பிதுவே. (கஎஉ)

தம்மா லறிந்திடு மட்டுநற் காந்தர்கள் சாற்றியினி
எம்மா லுரைக்க வரிதென்று சோழனை யிட்டுச்சென்றே
சிம்மா சனத்து வெழிற்காம கோட்டத் திருத்தளியில்
மெய்ம்மா றினர்தமைக் காட்டினர் சோழன் மிகப்பணிந்தான்
அம்மா முனிவருந் தீர்க்கா யுசுவென் றருளினரே. (கஎங)

முன்னுளி விட்ட முனிசாப நீங்கு முடிவில்வந்தாய்
உன்னு லிதுபட் டினமாக வேண்டு முயர்தருவை
நன்னுளில் வைத்து நகர்செய்த தற்கொரு நாமமிடப்
பன்னுகப் பாயலில் பள்ளிகொள் வோனுடன் பார்வணங்கும்
மன்னுன கம்பரைச் சேவியென் றேயவர் வாழ்த்தினரே. (கஎச)

இப்பா ருலகினும் பொன்னுல கத்தினு மிந்நகருக்
கொப்பா யுரைப்ப தொருநக ரில்லை யுகமுடிவின்
இப்பாரு மில்லைகா ணென்றே யுரைசெய்து பின்புமுன்பும்
தப்பா தழிந்தழிந் தேதல மாமென்று சாற்றிச்சாத்தன்
கைப்பா னமருஞ் செண்டதைக் கேளென்று கழறினரே. (கஎரு)

கன்னி யிருப்பின் மகசாத்த னைச்சென்று கால்பணிந்தே
மன்னிய செண்டை வரமாகக் கேட்டவன் வாங்குகையால்
இன்னகர் மீதினிற் றெய்வங்கள் பூதங்க ளித்தனைக்கும்
மன்னிய மான்விலங் கும்வன வாசம தாயினதே. (கஎசு)

பூதம் பணிந்திடு நெல்வாயின் மன்னவன் போந்திறன்கண்
டிதின்றை மட்டுக் கிரையாமென் றெண்ணி யெதிர்க்கமன்னன்
பாதத் தணையுங் கோதைக் கவப்பூதம் பயந்தரசா
ஓதுநின் பேரே தெனக்கரி காலனென் றோதினனே. (கஎஎ)

பிழைபொறு நீயென்று பூதம் பணிந்தென் பிறகுளதோர்
அழகிய பெண்மை வடிவுதந் தாளின் னடியிணைக்கே
விழைதரு சேவைசெய் வேனென மன்னவன் மெத்தெனவே
பழுதிலே வாவென் றழைத்துவந் தானிப் பதிதனக்கே. (கஎஅ)

எப்படி யாயினுங் கொண்டுவந் தாயிர மாமிவரை
வைப்புற நித்த மிடுவேமென் றேயுரை மாற்றிச்சொல்லித்
தப்பி லரசற் கருகா நிலத்தி லடைத்தபின்பு
வெப்புறு தீயென மூக்கிற் சுவாசங்கள் வீசியவே. (கஎகூ)

பெருவாரி யான தவங்கண்டு நாளும் பிலத்தருகே
இருநாசி யூடுங் கழுவைக் கடாவி யிருந்ததற்பின்
ஒருமா னுடவன் குளத்தினிற் பாய்வ னுனக்கதனல்
வருமாண்டு தோறும் பசிதீரு மென்று வரங்கொடுத்துக்
கருமாறி யென்றதன் பேருமிட் டான்கரி காலனுமே. (கஅ0)

பண்டையிற் சாபங் கரிகால னீக்கிப் பதிமுழுதும்
செண்டினைக் கொண்டு நகரைநன் றாகத் திருத்தியெங்கும்
ஒண்டிடுக் கின்றிச் சமதல மாக்கியிவ் வூர்தனையே
விண்டலத் தோர்களும் வேட்டு வசித்திட வீதிகண்டு
மண்டலத் துக்குச் சிகாமணி யென்று மதித்தனனே. (கஅக)

மேடநன் மாதத்திற் பூருவ பட்சத்தின் மேற்றுதிதி
நாடு மொருபத்து நான்கிற் செவ்வாயினி னன்மகத்தில்
நீடிய கற்சட கந்தனிற் கட்டுச்சி நேரந்தனில்
தேடி முகூர்த்த மிட்டான் முனியாது சிறப்புறவே. (கஅஉ)

முத்தமிழ்க் காஞ்சி புரமென்று பேரிட்டு மோசமற
இத்தல மீதினிற் செக்கார் கருங்கல் லிவைபுகுந்தால்
மெத்திய செல்வங்க ளெல்லா மழிந்து மிடக்குமென்றே
சத்திதன் கால்வழி வந்தசெங் குந்தத் தலைவரினல்
உத்தம மாகத் திருக்காம கோட்டத்தி லூன்றினனே. (கஅங)

வடக்கம ராபுரந் தெற்குப்பல் லாபுரம் வாசல்களாம்
குடக்கே யிரணிய ஞர்புரம் வாசல் குளிர்கிழக்குப்
படைக்கொண்ட வாசற் றிருநீல கண்ட புரமெனவே
நடைப்பெறு வாசல்க ளுன்காகக் காஞ்சிக்கு நாட்டினனே. (கஅச)

பெருவாச னான்கு குறுமூடை யெட்டுப் பெருநதிபாய்
வருவாச லேழிரண் டேகரு வாக வகுத்துச்சுற்றும்
பருமா மதிலேப் பதிற்றறு காதப் பரப்பில்வைத்தே
தெருவா யிரமிந்து சூரியன் பேரினிற் செய்தனனே. (கஅரு)

செங்கொடி வீதிகள் கோபுர வீதிகள் தேர்செலுநல்
மங்கல வீதிகள் மாவீ திகணல்ல வாசகஞ்சேர்
அங்காடி வீதிகள் மேனிலே வீதிக ளங்குளபேர்
தங்களில் வாழத் தனிவீதி யாகச் சமைத்தனனே. (கஅசு)

சதுக்கங்க ளுங்குறுஞ் சந்தி களுநெடுஞ் சந்திகளும்
பொதுக்கங் களுமுச் சந்திகளும் மண்ணினிற் போய்வரமேல்
மதுக்களி யானை யடர்ந்துவந் தாற்றப்பி வந்துபுகும்
ஒதுக்கங் களுமற்று மெல்லா மமைத்தன னூரெங்குமே. (கஅள)

நாராச மூலே முடுக்குக் குறுந்துண்ட நாலிரண்டெட்
டீரா யிரந்தெரு வீதிக ளாக்கி யெழில்பெறவே
ஆராம முப்புரி சூளிகை மாளிகை யாடரங்கு
சீரான கோபுர மேனிலே யெங்கெங்குஞ் செய்தனனே. (கஅஅ)

அறிவோர்கள் முத்தமிழ் பாராட்டுஞ் சாலேக ளன்புடனே
வறியோர் தமக்கு வழங்கிடுஞ் சாலேகள் மாதவஞ்செய்
நிறையோம சாலேகள் சோறிடு சாலேக ணீதியுடன்
மறையோதுஞ் சாலேகள் மட்டற வூரெங்கும் வைத்தனனே. ()

அழுக்கில் மறையவர் மன்னர் வணிகர்வே ளாளர்தம்மில்
ஒழுக்கமுண் டான வருக்கத் தொழில்செய் துறுமரபில்
வழுக்கறப் பன்னீ ராயிரமா நான்கு மரபினுக்கும்
இழுக்கில் நற்குடி நாற்பத்தெண் ணாயிரமு மேற்றினனே. (ககூ0)

பாடகச் சுற்றில் மறையோரை யேற்றிப் பவளச்சுற்றில்
நீடிய மன்னர் தமையேற்றி யூரக நின்றசுற்றில்
கேடில் வணிகர் கிளேயேற்றி மற்றைக் கிளேச்சுற்றிலே
நாடிய சூத்திரர் தங்களே யேற்றின னன்குறவே. (ககூக)

அடர்ந்த வலங்கைதொண் ணூற்றெட்டுச் சாதிக ளத்தனையும்
இடங்கை வழங்குதொண் ணூற்றெட்டுச் சாதிக ளத்தனையும்
தடங்கொள வெங்கு நிறைகுடி யேற்றியச் சாதிக்கெல்லாம்
திடங்கொளச் செப்பே டெழுதிவைத் தானவர் செய்தொழிலே. ()

சென்றோ ரிருவர் வழக்கேறி ஞனடுச் செப்பினர்க்கே
கன்றீன்ற நற்பசு மென்மேல் பெருக்கென்று கற்பித்தங்கு
வென்றோர் வழக்கினுந் தோற்றோர் வழக்கென்று வெல்லுமென்று
மன்றோரஞ் சொல்வர் மனைகன்று மேய்கைக்கும் வைத்தனனே. ()

திருக்கோயி லெங்கணும் பொன்ஞகை வேய்ந்து சிகரமெல்லாம்
குருக்கோம ளத்தெழு மாணிக்கத் தாற்செய் குடங்கள்வைத்தே
உருக்கோல முள்ளது நாசித் தலைகளு மோங்குமதன்
கருக்கோடி யாவு நவமணி யான்முற்றக் கண்டனனே. (ககசு)

வட்டம் பயிலு மணக்கொள்கை யாந்திரு வாசியங்கள்
பட்டம் பதக்கந் திருத்தோடு கொப்புடன் பைங்கடகம்
கட்டும் வடமணி மாலையே கம்பற்குங் கல்லுமைக்கும்
தட்டாரைக் கொண்டு திருவா பரணஞ் சமைத்தனனே. (ககரு)

மணிதூப தீப மபிடேகஞ் செய்யும் மணிக்கலசம்
அணிசேர் திருவட்ட ணைக்காற் றளிகைசங் கத்தனையும்
திணிசேர்பொன் ஞகை வுழைக்கல முட்டுச் சமைத்தளித்தான்
பணிபூணுங் கம்பற்குங் காமாட்சி யாற்கும் பழுதறவே. (ககசு)

சாலுவை யாற்செய் திருப்பரி வட்டந் தனினல்லதும்
காலு மதிவெண் கதிர்க்கற்றை போலுங் கவரிகளும்
மேலியல் முத்து விதானங்க ளும்பட்டு மேற்கட்டியும்
கோலநன் பட்டுத் திருத்திரை யாவுங் கொடுத்தனனே. (ககஎ)

விண்ணமை சந்திர வட்டஞ் சதுக்கங்கள் வெண்கொடிகள்
வண்ண மிகுநற் கொடைச்சின்னம் வட்ட வகையனைத்தும்
பண்ணமை பஞ்ச பகர்சத்த மாகிய பல்லியமும்
எண்ணில் பரிகல மும்பருச் சின்னமு மீந்தனனே. (ககஅ)

ஞாஞ கமத்தின் படியிமை யோரிட நல்லபடி
நூஞ திகமாக வாராய்ந்து வைத்து நுவன்றிடவே
தாஞ யிரத்துத் தொளாயிரம் பல்படி சார்நிமந்தம்
மேஞளில் விட்ட படித்தரம் யாவும் விதித்தனனே. (ககக)

மஞ்சன மாட்டித் திருமாலை சாத்தி மகிழ்ந்தமுது
விஞ்ச நிவேதித்து பாம்பணி மாட்டி மிகும்பலியிட்
டஞ்சு முகத்தினி லோம விழாச்செய் தமைத்தபின்பு
பஞ்ச மகாசத்தங் கூத்தாடல் நித்தமும் பண்ணினனே. (உ00)

தருமாத பூசை யயனம் பிரதோடஞ் சங்கிரமம்
வெகுவான திங்க டிவச மருக்கனில் மேதகவே
மகபூசை கொண்டு விழாப்போது கைக்கு வகுத்தபின்பு
புகழும்பர் செய்பங் குனித்திரு நாள்செய்யப் புக்கனனே. (உ0க)

கொடியேற்றி நித்தந் திருவீதி கோப்புக் குலாவிவித்தை
முடியேற்றித் தேருந் திருக்காப் புஞ்சாந்து முடித்துபத்தில்
படியேற்ற மாநெல் லிருநாழி வைப்பித்துச் பச்சையுமைக்
கடியேற்ற மாக நடத்திவைத் தாரண்டர் கட்டளையே. (உ0உ)

கருமாறி பாய்வித்து முன் திறக் கப்பின் னடைக்கவொரு
மருமா திழிந்து சென்றற்பேந் திரத்திலு மாதவஞ்செய்
பெருமாதைப் பூசித்து மீளும் படிசெய்து பின்மற்றநாள்
இருமாத ரூடலுந் தீர்த்தே கொடியை யிறக்கினனே. (உ0௩)

எட்டிரண் டாய சிவாலய மாகிய வித்தனைக்கும்
மட்டுறுங் கோபுர மண்டபந் தேர்கள் மதிலனைத்தும்
கட்டிநன் றாக மகாபூசை நாடொறுங் கண்டதற்பின்
இட்டர்கொண் டாடத் திருநா ணடத்தின னின்புறவே. (உ0ச)

அத்தி கிரியிற் றிருப்பணி பூசை யரியவிழாச்
சித்திர மாம்படி திங்க டிவசங்கள் செய்தமைத்தே
யொத்த திரிமூர்த்தம் பன்னிரண் டாயிர முள்ளவெல்லாம்
மெத்தத் திருப்பணி பூசையுந் தான்கண்டு விட்டனனே. (உ0ரு)

பேடனைக் கொண்டநற் றூண்டக் கியன்பிர திட்டைபண்ணி
வேடரைக் கொண்டோண காந்தன் றளிசெய்து வேந்தன்வரக்
கூடிய சாபங் களைநீக்கி நீங்கக் குறைவறவே
நீடு தவஞ்செய்து பேறுபெற் றோர்வர நீக்கமற்றே. (உ0சு)

திருப்பணி பூசைத் திருநாள்க டிங்க டிவசமெல்லாம்
பெருக்க நடக்கைக்கு வேண்டுந் திருச்செல்வம் பேணிவைத்தே
தருக்கிய நாடெங்குந் தேவதை மண்டலந் தானெனவே
விருப்புடன் கல்வெட்டி யெல்லை தொறுநட்டு விட்டனனே. (உ0எ)

எல்லாரு மேத்திய காமாட்சி யம்மைக்கு மேகம்பற்கும்
அல்லாம லத்தி கிரிநாத ருக்கு மடிபணிந்தே
செல்லாத மண்டல மெல்லாம் புகழைச் செலுத்துமென்றே
சொல்லால் விடைகொண்டு மேருவுக்கேகினன் சோழனுமே. (உ0அ)

மாசற்ற ஞாலந் தரவேணு மென்று மலரவனுர்
தேசுற் றிலங்குங் கபாலத்தில் மேவுஞ் சிவனைநன்ருய்ப்
பூசித் திருந்து வரம்பெற லாலிந்தப் பூதலத்தில்
வீசிப் பிரம புரக்காஞ்சி யென்று விளம்புவரே. (உ0கூ)

ஒண்டாம லங்கிங் கொதுங்காமற் சென்றுநின் றுட்புறத்தே
தண்டார் வழுதி பொறுத் தயல்கொண்டுநற் சாத்தன் தந்த
செண்டா லடித்து மகமேரு தன்னைத் திருப்பிவிண்ணோர்
கொண்டாடவெற்றிப்புலிப்பொறித்தானக்கொழுமடிக்கே. (உக0)

புனிதரைப் போற்றியே வாழுந்தென் காஞ்சிப் புரத்தில்வந்தே
மனிதரை யாண்டு கரிபரி யாண்டு மனுநெறியால்
நனிதரை யாண்டு வளர்சக்ர வாள நகமளவாய்
இனிதர சாண்டு கரிகால சோழ னிருந்தனனே. (உகக)

காஞ்சிப் புராணத்தைக் கற்பவர் கேட்பவர் கட்டுரைக்க
வாஞ்சிப் பவர்கள்மற் றெல்லாரு மிம்மைக்கு மாமலர்மேல்
பூஞ்சித் திரமயில் பார்வையுண் டாகிப் புவிபுரப்பர்
தாஞ்சிக் கெனப்பின்பு விண்ணோர் புரத்தினிற் சார்குவரே. (உகஉ)

வாழி

காஞ்சிப் பதியுடனே கம்பர் திருத்தளியும்
வாஞ்சித் தரனுரை மாவடிக்கீழ்ப்—பூஞ்சித்த
அம்மை திருத்தாளு மன்பர் திருவடியும்
இம்மையினும் வாழ்க வினிது.

காஞ்சிப் புராணக் கலித்துறை முற்றியது.

வேலுமயிலுந்துணை

PRINTED AT THE 'NOBLE PRESS' TRIPLICANE, MADRAS. S.E.